1979 மார்ச் 15]

திரு. அ. செல்வராசன் : சென்னை மத்தியச் சிறைச் சாலையைப் பொறுத்தவரையில்—அங்கே நான் ஒரு ஆண்டுக் காலம் மிசாக் கைதியாக இருந்திருக்கிறேன் — அங்கே ஜெயிலுக் குள்ளே எந்தவிதமான கான்டீனும் இல்லை. அப்படி ஒரு வேளை உள்ளேயே இருந்தாலும் அங்கே கைதிகளுக்கு இடம் தருவதில்லை. எனவே இந்த அரசு இனிமேலாவது உள்ளே இருக்கக்கூடிய கைதிகளுக்கு அந்தச் சலுகைகளைச் செய்துதர முன்வருமா?

THE Hon. Thiru K. NARAYANASWAMY : If the Hon'ble Member pleased to give the date of his release from MISA imprisonment, I would give a satisfactory answer for this question.

முன்னாள் இராணுவ வீரர் முதலியோர் பிள்ளைகளுக்குப் படிப்புதவித் தொகை.

வினா எண். 407 திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

1977–78-ம் ஆண்டில் தமிழ் நாட்டில் இராணுவ வீரர்கள், முன்னாள் இராணுவ வீரர்கள், விடுதலைப் போராட்ட வீரர்கள், அகதிகள் இவர்களுடைய பிள்ளைகள் எத்தனைப் பேர்களுக்கு பள்ளிக் கல்வி படிப்பு உதவித் தொகை வழங்கப்பட்டது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

780 இராணுவ வீரர்களின் குழந்தைகள், 2,814 முன்னாள் ராணுவ வீரர்களின் குழந்தைகள், 24 விடுதலைப் போராட்ட வீரர்களின் குழந்தைகள், 404 பர்மா அகதிகளின் குழந்தைகள், 294 இலங்கை அகதிகளின் குழந்தைகள் ஆகியோருக்கு 1977–78ம் ஆண்டில் பள்ளிக் கல்வி படிப்பு உதவித் தொகை வழங்கப் பட்டது. 1977–78ல் இவைகளின் மொத்த மதிப்பு ரூ. 2,15,696·65.

திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னாள் இராணுவ வீரர்கள், விடுதலைப் போராட்ட வீரர்கள், அகதிகள் இவர்கள் பிள்ளைகளுக்கு அளிக்கப்படுகிற கல்விச் சலுகைகள்பற்றி இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். அதே போல் உடல் ஊனமுற்றோர், விதவைகள் ஆகியோரது குழந்தை களுக்கும் இத்தகைய சலுகைகள் வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதற்கு தனிக் கேள்வி போடவேண்டும்.

[முற்பகல் 9·50]

திரு. வி. கே. கோதண்டராமன் : ஐயா, இந்த ராணுவ வீரர்கள், முன்னாள் இராணுவ வீரர்கள், போராட்ட வீரர்கள், அகதிகள் இவர்களுடைய குழந்தைகளுக்கு எல்லாம் கல்வி படிப்பதற்காக உதவி தொகை கொடுத்திருப்பதைப் பற்றி கூறினார்கள். ரொம்ப சந்தோஷம். அது எந்த அளவுக்கு கொடுக்கப்படுகிறது என்பது வேறு விஷயம். முன்னாள் ராணுவ வீரர்களின் குழந்தைகளுக்கு உத்தியோகங்கள் வழங்குவதில் சலுகைகள் வழங்குவது போல், விடுதலை போராட்ட வீரர்களுடைய குழந்தைகளுக்கும் முன் உரிமை சலுகை வழங்கப்படுகிறதா? இல்லையென்றால் இந்தச் சலுகை அவர்களுக்கும் கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இதற்கு தனியாக கேள்வி போடவேண்டும்.

திரு. இரா. முத்தையா : பேரவைத் தலைவர் அவர்களே, விடுதலை போராட்ட வீரர்களின் குழந்தைகளுக்கு இந்த சலுகைகள் கொடுக்கப்படுவதைப் போன்று இந்த கல்வி உதவித் தொகை இந்தி எதிர்ப்பு போராட்ட வீரர்களின் குழந்தைகளுக்கு தரப்படுமா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் ; தனிக் கேள்வி வேண்டும்.

திரு. கா. சுப்ரவேலு : தலைவர் அவர்களே, இந்தக் கல்வித் துறையில் உதவித் தொகை கொடுக்கப்படுவதில், நான் அறிந்த வரையில், நாம் எந்த காரியத்திற்காக கொடுக்க வேண்டும் என்று முயற்சி எடுத்துக் கொள்கிறோமோ அந்தக் காரியத்திற்கு பயன்படுத்துகின்ற அளவுக்கு உரிய காலத்தில் நிச்சயமாக கொடுப்பதில்லை. ஒவ்வொரு ஆண்டின் கடைசி காலத்தில் கொடுக்கப்பட்டு வருகின்ற நிலைமை இருந்து வருகிறது. இதை மாற்றி வருட ஆரம்பத்திலேயே இந்த மாதத்திற்குள் நிச்சயமாக கொடுக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்ட ஒரு வரையறை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இந்தக் குறைபாட்டைப் போக்க அரசு முயற்சி எடுக்கும்.

தனியார் கல்லூரிகளை ஒழுங்குபடுத்தும் சட்டம்.

*வினா எண். 408 திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பார :